1276

# வலயக்கல்வி அலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை – 2016

| தரம் : 07 | சைவநெறி<br>பெயர் / சுட்டெண் : ..................................................... | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி - I

**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. பாடசாலைகளில் விசேட வழிபாடுகள் நிகழ்த்தப்படும் நாள்
   1) திங்கட்கிழமை 2) புதன்கிழமை
   3) வியாழக்கிழமை 4) வெள்ளிக்கிழமை

02. திருச்சிராப்பள்ளிக் குன்றுடையானின் திருநாமம்
   1) தாயுமான சுவாமி 2) குழந்தைச் சுவாமி
   3) முத்துக்குமார சுவாமி 4) கதிரவேல் சுவாமி

03. 'மகரசங்கிராந்தி' என அழைக்கப்படும் பண்டிகை
   1) தீபாவளி 2) ஆடிப்பிறப்பு
   3) தைப்பொங்கல் 4) புதுவருடப் பிறப்பு

04. மனுநீதிச் சோழனின் மகன்
   1) அபிமன்யு 2) சயந்தன்
   3) வீதி விடங்கன் 4) பரதன்

05. திருமுறைகளின் எண்ணிக்கை
   1) ஏழு 2) பன்னிரண்டு
   3) எட்டு 4) பதின்நான்கு

06. 'சுந்தரனாகம்' எனப் போற்றப்படும் நூல்
   1) திருக்கோவையார் 2) திருமந்திரம்
   3) திருவிசைப்பா 4) திருப்பல்லாண்டு

07. காரைக்காலம்மையாரின் இளமைப்பெயர்
   1) புனிதவதியார் 2) திலகவதியார்
   3) பரவையார் 4) மானி

08. நாவுக்கரசர் திருக்கைலைக் காட்சியைக் கண்ட இடம்
   1) திருவீழிமிழலை 2) திருமறைக்காடு
   3) திருவாரூர் 4) திருவையாறு

09. திருக்கேதீச்சரத்தின் தீர்த்தம்
   1) பாலாவி 2) கண்டகி
   3) பாவநாசம் 4) மாணிக்ககங்கை


kalvi.lk

10. மனையடி சாஸ்திரத்தில் கூறப்படும் விடயம்
1) தேர் அமைக்கும் முறை
2) ஆலயம் அமைக்கும் முறை
3) வீடு கட்டும் முறை
4) விக்கிரகம் அமைக்கும் முறை

11. திருமணம் கைகூடுவதற்காகப் பெண்களால் அனுட்டிக்கப்படும் விரதம்
1) சிவராத்திரி
2) ஆடிச்செவ்வாய்
3) தைப்பூசம்
4) மாசிமகம்

12. திருமுறைகளுக்குப் பண் வகுத்தவர்
1) காழிவேந்தர்
2) கோவைவேந்தர்
3) தாண்டகவேந்தர்
4) மதங்க சூளாமணி

13. "பொன்னார் மேனியனே...." தேவாரத்தின பண்
1) புறநீர்மை
2) நட்டராகம்
3) காந்தாரம்
4) கொல்லி

14. பிரித்தானிய அரசாங்கத்திடம் 'நைட்' பட்டம் பெற்றவர்
1) சேர். பொன். இராமநாதன்
2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
3) சுவாமி விபுலானந்தர்
4) சுவாமி விவேகானந்தர்

15. திருஞானசம்பந்தர் முதல் பாடிய பதிகம்
1) "கூற்றாயினவாறு விலக்ககிலீர்..."
2) "பித்தாப் பிறைசூடி..."
3) "தோடுடைய செவியன்..."
4) 'தில்லைவாழ் அந்தணர்தம்..."

16. நரசிங்கமுனையரிடம் வளர்ந்த சமய குரவர்
1) திருநாவுக்கரசர்
2) திருஞானசம்பந்தர்
3) மாணிக்கவாசகர்
4) சுந்தரமூர்த்திநாயனார்

17. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடியவர்
1) சேந்தனார்
2) திருமாளிகைத்தேவர்
3) பரணதேவர்
4) நக்கீரர்

18. திருமுறைப்பாடல்கள் ஓதுவதற்கு முன்பும் ஓதிய பின்பும் சொல்ல வேண்டியது
1) ஓம் சாந்தி
2) எல்லோரும் வாழ்க
3) திருச்சிற்றம்பலம்
4) நமசிவாய

19. மாணிக்கவாசகரின் குருபூசைத் தினம்
1) சித்திரைச்சதயம்
2) ஆனிமகம்
3) ஆடிச்சோதி
4) வைகாசி மூலம்

20. கர்ணனின் கதை மூலம் நாம் பின்பற்ற வேண்டிய விழுமியப் பண்பு
1) பணிவு
2) இரக்கம்
3) சகோதரத்துவம்
4) நன்றி மறவாமை

(20 x 2= 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**முதலாம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. **பின்வரும் பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாகப் பிழையின்றி எழுதுக.**

1) "நத்தார் படை...."
2) "அம்மையே அப்பா...."
3) ' முத்திநெறி யறியாத......."
4) "வேதநெறி...."

(10 + 10 = 20 புள்ளிகள்)

02. **"நன்றி மறப்பது நன்றன்று."**

1) 'உண்ட வீட்டுக் இரண்டகம் செய்யாதே'. இக் கூற்றினூடாக வலியுறுத்தப்படும் விழுமியப் பண்பு யாது?
2) நன்றி மறவாப் பண்பினால் உயர்வடைந்தவர்கள் இருவரின் பெயர்களை எழுதுக.
3) நீர் கடைப்பிடிக்கும் நற்பண்புகள் எவை?
4) நீர் நற்பண்புகளைக் கடைப்பிடிப்பதால் பெற்ற நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக.

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

03. **"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"**

1) நீர் ஆலயத்திற்குச் செல்லும் முறையினை எழுதுக.
2) ஆலய வழிபாட்டின் போது செய்யப்படும் நமஸ்காரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. அதில் ஒன்றைச் செய்யும் முறையை எழுதுக.
3) ஆலயத்தில் நீர் செய்யும் தொண்டுகள் மூன்றினைக் குறிப்பிடுக.
4) ஆலய வழிபாட்டினால் நீர் பெற்ற பயன்கள் மூன்றினை எழுதுக.

(2 + 2+ 3 + 3 = 10 புள்ளிகள்)

04. **"சைவத்தின் காவலர்கள் சமய குரவர்கள்"**

1) ஈழத்துத் தலங்களைப் போற்றி தேவாரம் பாடிய நாயன்மார்கள் யாவர்?
2) திருநாவுக்கரசு நாயனாருக்குச் சமணர்கள் செய்த கொடுமை ஒன்றினை எழுதுக. அதிலிருந்து அவர் தப்பிய வழியை எழுதுக.
3) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் நிகழ்த்திய அற்புதங்கள் மூன்றினை எழுதுக.
4) மாணிக்கவாசக சுவாமிகளுக்கு இறைவன் அருள்புரிந்த சந்தர்ப்பங்கள் இரண்டினை எழுதுக.

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)



kalvi.lk

05. **"செயற்கரிய செயலைச் செய்பவர்கள் சிவனடியார்கள்"**

1) பெரியபுராணத்தில் போற்றப்படும் பெண் அடியார்கள் இருவரின் பெயர்களை எழுதுக.

2) காரைக்காலம்மையாரிடம் காணப்பட்ட சிறந்த பண்புகள் இரண்டினை எழுதுக.

3) காரைக்காலம்மையார் பாடிய பிரபந்தங்கள் எவை?

4) காரைக்காலம்மையார் இறைவனிடம் வேண்டிப் பெற்ற வரங்கள் எவை?

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

06. **"விரதங்கள் எமக்கு உடல், உள ஆரோக்கியத்தைத் தருகின்றன."**

1) வருட விரதங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

2) தைப்பூச தினத்தன்று மேற்கொள்ளப்படும் சுப கருமங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

3) நீர் விரதம் அனுட்டிக்கும் முறையினை எழுதுக.

4) விரதம் அனுட்டிப்பதன் மூலம் நாம் பெறும் பயன்கள் எவை?

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

07. **பின்வருவனவற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.**

1) மாணவர் ஒழுக்கம் 2) திருமுறை ஓதுதல்

3) தைப்பொங்கல் 4) சேர். பொன். இராமநாதன்

(5 + 5 = 10 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION | PAPER DISCUSSION**

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள் கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457